**1.இரா.பி.சேதுப்பிள்ளை தனது எந்த நூலுக்கு 1955-இல் சாகித்ய அகாடமி விருது பெற்றார்?**

அ)தமிழ்விருந்து

ஆ)தமிழ்நாடு நவமணிகள்

இ)தமிழின்பம்

ஈ)செந்தமிழும் கொடுந்தமிழும்

விடை : இ)தமிழின்பம்

**2.திரு.வி.கலியாணசுந்தரனார் இந்த சிறப்பு பெயரில் சிறப்பிக்கப்படுகிறார்**

அ)தமிழ்நாயகர்

ஆ)தமிழ்த்துறவி

இ)தமிழ்த்தென்றல்

ஈ)தமிழ்ஞாயிறு

விடை : இ)தமிழ்த்தென்றல்

**3.இதில் திரு.வி.க பற்றிய தவறான கூற்று எது?**

அ)பிறந்த ஊர் துள்ளம்

ஆ)சோமசுந்தர பாரதியிடம் தமிழ் பயின்றார்

இ)தமிழ்ப் பேராசிரியாராக பணிபுரிந்தார்

ஈ)எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்றார்

விடை : ஆ)சோமசுந்தர பாரதியிடம் தமிழ் பயின்றார்

**4.திரு,வி.க இந்த தலைவரின் தமிழகம் வருகையின் போதெல்லாம் மேடைப் பேச்சை மொழிபெயர்த்தார்?**

அ)பாலகங்கார திலகர்

ஆ)ஜவஹர்லால் நேரு

இ)நேதாஜி சுபாஷ் சந்தரபோஸ்

ஈ)காந்தியடிகள்

விடை : ஈ)காந்தியடிகள்

**5.இவற்றில் திரு.வி.க பற்றிய தவறான கூற்று எது?**

அ)தமிழுலகின் இழிந்த நிலையை ஒருங்கள் என்றார்

ஆ)தமது பேச்சாலும் தமிழ் வளர்த்தவர்

இ)நாடகத்தமிழின் முன்னோடி

ஈ)திரு.வி.க நடை என்ற தனிநடை உருவானது

விடை : இ)நாடகத்தமிழின் முன்னோடி

**6.திரு.வி.க வாய்த்த மொழிநடை மலை எனத் தமிழுலகில் ஒங்கி உயர்ந்துள்ளது என்றவர்**

அ)அறிஞர் அண்ணா

ஆ)தெ.பெ.மீனாட்சி சுந்தரனார்

இ)மறைமலையடிகள்

ஈ)இரா.பி.சேதுப்பிள்ளை

விடை : ஆ)தெ.பெ.மீனாட்சி சுந்தரனார்

**7.இவற்றில் பொருத்தமற்ற இணை எது?**

அ)திரு.வி.க நூல் - மனித் வாழ்க்கையும் காந்தியடிகளும்

ஆ)பெண்ணின் பெருமை - வாழ்க்கை துணை நலம்

இ)திரு.வி.க நூல் - ஒரு பாரத புத்திரன்

ஈ)இமயமலை - தியானம்

விடை : இ)திரு.வி.க நூல் - ஒரு பாரத புத்திரன்

**8.இவற்றில் திரு.வி.க எழுதாத உரைநடை நூல் எது?**

அ)கள்ளோ காவியமோ,தமிழ்க்காதல்

ஆ)முருகன் அல்லது அழகு,சைவத்திறவு

இ)சைவத்தின் சமரசம் ,கடவுட் காட்சியும் தாயுமானவரும்

ஈ)இராமலிங்க சுவாமிகள் திருவுள்ளம்

விடை : அ)கள்ளோ காவியமோ,தமிழ்க்காதல்

**9.இவற்றில் திரு.வி.க இயற்றாத நூல் எது?**

அ)தமிழ்நாடும் நம்மாழ்வாரும்,நாயன்மார் வரலாறு

ஆ)தமிழ்நூல்களில் பௌத்தம்,உள்ளொளி

இ)கொடைவிளக்கு,இலக்கிய விளக்கம்

ஈ)என் கடன் பணிசெய்து கிடப்பதே தமிழ்ச்சோலை

விடை : இ)கொடைவிளக்கு,இலக்கிய விளக்கம்

**10.இவற்றில் திரு.வி.க எழுதிய செய்யுள் நூல் எது?**

அ)முருகன் அருள்வேட்டல்

ஆ)திருமால் அருள் வேட்டல்

இ)கிறித்துவின் அருள்வேட்டல்

ஈ)இவை அனைத்தும்

விடை : ஈ)இவை அனைத்தும்

**11.இவற்றில் திரு.வி.க இயற்றாத செய்யுள் நூல் எது?**

அ)பெண்மானம் இதய ஒலி

ஆ)அருகன் அருகே உரிமை வேட்டல்

இ)பொதுமை வேட்டல்

ஈ)பொருளும் அருளும் அல்லது மார்க்சியமும் காந்தியமும்

விடை : அ)பெண்மானம் இதய ஒலி

**12.திரு.வி.க பற்றிய சரியான கூற்று எது**

அ)தேசபக்தன் நவசக்கதி இதழ்களை நடத்தினார்

ஆ)தொழிலாளர் இயக்கம் நடத்தினார்

இ)வழக்கறிஞர் பணியை துறந்தார்

ஈ)சுத்த சன்மார்க்கியாகி தொண்டாற்றினார்

விடை : இ)வழக்கறிஞர் பணியை துறந்தார்

**13.திரு.வி.க உடல்தளர்ந்து படுக்கையில் இருந்தபோதும் வளர்ச்சியும் வாழ்வும் இல்லது படுக்கைப் பிதற்றல் என்னும் நூலை இவரின் உதவியுடன் வெளியிட்டார்**

அ)சிங்காரவேலர்

ஆ)மறைமலையடிகள்

இ)மு.வரதராசனார்

ஈ)மா.இராசமாணிக்கனார்

விடை : இ)மு.வரதராசனார்

**14.இவற்றில் திரு.வி.க பற்றிய தவறான கூற்று எது?**

அ)தமிழ்த்தென்றல் ,தமிழ்ச்சோலை சிறப்பு பெயர்கள்

ஆ)பெரியபுராணக்குறிப்புரை எழுதினார்

இ)திருக்குறள் முதல் 10 அதிகாரங்களுக்கு விளக்கவுரை

ஈ)திருவிளையாடற் புராணம் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார்

விடை : ஈ)திருவிளையாடற் புராணம் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார்

**15.இவற்றில் திரு.வி.க பற்றிய கூற்று எது?**

அ)நான் தனியாக வாழவில்லை தமிழோடு வாழ்கிறேன்

ஆ)பழந்தமிழ் வீரத்துடன் எழுங்கள்

இ)தமிழ் இறந்தபின் தமிழ்மண்மட்டுமிருந்தென்ன?

ஈ)இவை அனைத்தும்

விடை : ஈ)இவை அனைத்தும்

**16.ஓலைச்சுவடி பற்றி சரியான கூற்று எது**

அ)பனைஓலை பக்குவப்படுத்தப்பட்டது

ஆ)பனைஓலையால் எழுத்தாணி கொண்டு எழுதுவார்கள்

இ)செய்யுள் ,இலக்கணம் எழுதப்பட்டன

ஈ)இவை அனைத்தும்

விடை : ஈ)இவை அனைத்தும்

**17.ஓலைச்சுவடி பற்றிய தவறான கூற்று எது?**

அ)ஓலைச்சுவடிகளில் புள்ளி இருக்காது

ஆ)ஒற்றைக்கொம்பு,இரட்டைக்கொம்பு பொயிதாக இருக்கும்

இ)எழுதப்பட்ட ஓலைக்கு ஓலைச்சுவடி என பெயர்

ஈ)ஓலை கிழியாமல் எழுதுதல் வேண்டும்

விடை :
ஆ)ஒற்றைக்கொம்பு,இரட்டைக்கொம்பு பொயிதாக இருக்கும்

**18.இவற்றில் எங்கு இலைச்சுவடிகள் பாதுகாக்கப்படுவதில்லை?**

அ)சென்னை கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம்
ஆ)சென்னை அரசு ஆவணக் காப்பகம்
இ)சென்னை செம்மொழித்தமிழ் ஆய்வு நிறுவனம்
ஈ)தஞ்சாவூர் சரசுவதி நூலகம்
விடை : இ)சென்னை செம்மொழித்தமிழ் ஆய்வு நிறுவனம்

**19.இவற்றில் உ.வே.சா பற்றிய தவறான கூற்று எது?**

அ)பிறந்த ஊர் உத்தமதானபுரம்
ஆ)இயற்பெயர் பார்த்தாசாரதி
இ)ஆசிரியர் மகாவித்தவான் மீனாட்சிசுந்தரம்
ஈ)உத்தமதானபுரம் வேங்கடசுவப்பு சாமிநாதான்
விடை : ஆ)இயற்பெயர் பார்த்தாசாரதி

**20.உ.வே.சா.தனது வரலாற்றை என் சரிதம் என எந்த இதழில் தொடராக எழுதினார்?**

அ)குமுதம்
ஆ)மணிக்கொடி
இ)ஆனந்தவிகடன்
ஈ)சுதேசமித்ரன்
விடை : இ)ஆனந்தவிகடன்

**21.டாக்டர் உ.வே.சா நூல்நிலையம் சென்னையில் எங்கு அமைந்துள்ளது?**

அ)திருவல்லிக்கேணி
ஆ)அடையாறு
இ)பெசண்ட் நகர்
ஈ)தியாகராயர் நகர்
விடை : இ)பெசண்ட் நகர்

**22.இவற்றில் உ.வே.சா பதிபிக்காத நூல் எது?**

அ)சீவகசிந்தாமணி
ஆ)சிலப்பதிகாரம்
இ)கம்பராமாயணம்
ஈ)மணிமேகலை
விடை : இ)கம்பராமாயணம்

**23.மீனாட்சி சுந்தரனார் பற்றிய தவறான கூற்று எது?**

அ)எண்ணெய் கிராமத்தில பிறந்தார்
ஆ)பரிதிமாற்கலைஞரிடம் தமிழ் கற்றார்
இ)இலக்கிய இலக்கண நூல்களில் நன்கு புலமை பெற்றார்
ஈ)திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரனார் என அழைக்கப்பட்டார்
விடை : ஆ)பரிதிமாற்கலைஞரிடம் தமிழ் கற்றார்

**24.இவற்றில் மீனாட்சிசுந்தரனாரின் மாணவர் இல்லாத ஒருவர்**

அ)குலாம் காதர் நாவலர்
ஆ)சவரிராயலு,தியாகராசர்
இ)இராகவையங்கார்
ஈ)சாமிநாதர்
விடை : இ)இராகவையங்கார்

**25.இவற்றில் மீனாட்சிசுந்தரனார் எந்த ஆதின வித்துவானாக பணிபுரிந்தார்?**

அ)தருமபுர ஆதீம்
ஆ)திருவாவடுதுறை ஆதீனம்
இ)பேரூர் ஆதினம்
ஈ)மதுரை ஆதீனம்
விடை : ஆ)திருவாவடுதுறை ஆதீனம்

**26.மீனாட்சிசுந்தரனார் பற்றிய தவறான கூற்று எது?**

அ)வாழ்வின் பெரும்பகுதியயை கற்பிப்பதிலேயே செலவழித்தார்

ஆ)ஓவியக்கலையிலும் சிறந்திருந்தார்
இ)எண்பதுக்கும் மேற்பட்ட நூல்களை இயற்றியுள்ளார்
ஈ)இவற்றில் எதுவுமில்லை
விடை : ஆ)ஓவியக்கலையிலும் சிறந்திருந்தார்

**27.டாக்டர் உ.வே.சாமிநாதரை பதிப்புத் துறைக்கு தூண்டியவர்?**
அ)எஸ்.வையாபுரிப் பிள்ளை
ஆ)இ.வை.அனந்தராமையர்
இ)சேலம் இராமசாமி முதலியார்
ஈ)ச.தண்டபாணி தேசிகர்
விடை : இ)சேலம் இராமசாமி முதலியார்

**28.இவற்றில் பொருத்தமான இணை எது?**
அ)தழின் தொன்மையை உலகறியச் செய்தவர் - கால்டுவெல்
ஆ)தமிழைத் தழைக்கச் செய்த செம்மல் - மறைமலையடிகள்
இ)தமிழை ஆலென வளர்த்து மாண்புறச் செய்தவர் - தேவநேயப் பாவாணர்
ஈ)இவை அனைத்தும்
விடை : ஈ)இவை அனைத்தும்

**29.இவற்றில் தேவநேயப் பாவாணரின் சிறப்புப் பெயர் எது?**
அ)மொழிஞாயிறு
ஆ)தனித்தமிழ் ஊற்று
இ)இலக்கியப் பெட்டகம்
ஈ)இவை அனைத்தும்
விடை : ஈ)இவை அனைத்தும்

**30.இவற்றில் எது தேவநேயப் பாவாணரின் சிறப்புப் பெயர் இல்லை**
அ)இலக்கியச் செல்வர்
ஆ)இலக்கணச் செம்மல்
இ)தமிழ்மானங் காத்தவர்
ஈ)செந்தமிழ் ஞாயிறு தமிழ்ப் பெருங்காவலர்
விடை : அ)இலக்கியச் செல்வர்

**31.இவற்றில் தேவநேய பாவாணர் பற்றிய தவறான கூற்று எது?**
அ)பிறந்தஊர் சங்கரன்கோவில்
ஆ)174 சிறப்புப்பெயர்களைப் பெற்றவர்
இ)நான்காம் தமிழ்ச்சங்கம் அமைப்பதில் முன்னோடி
ஈ)பண்டிதர்,புலவர்,வித்துவான்
விடை : இ)நான்காம் தமிழ்ச்சங்கம் அமைப்பதில் முன்னோடி

**32.தன் வாழ்நாள் முழுவதும் இதற்காக ஆய்வு செய்து நிறுவிய செம்மல் தேவநேயப் பாவாணர்**
அ)உலக முதன்மொழி தமிழ்
ஆ)இந்திய மொழிகளுக்கு மூலமும் வேரும் தமிழ்
இ)திராவிட மொழிகளுக்குத் தாய்மொழி தமிழ்
ஈ)இவை அனைத்தும்
விடை : ஈ)இவை அனைத்தும்

**33.இவற்றில் தேவநேயப்பாவாணரின் சரியான கூற்று எது?**
அ)உலகின் முதல் மாந்தன் தமிழன்
ஆ)தமிழன் தோன்றிய இடம் குமரிக் கண்டம்
இ)மொகஞ்சதாரோ,ஹரப்பா நாகரிகம் பழந்தமிழர் நாகரிகம்
ஈ)இவை அமைத்தும்
விடை : ஈ)இவை அமைத்தும்

**34.இவற்றில் தேவநேயப்பாவாணர் வலியுறுத்தாதது எது?**
அ)வடமொழி வல்லாண்மையிலிருந்து மீட்கப்பட வேண்டும்
ஆ)ஆங்கிலத்தின் மோகத்தை அழிக்க வேண்டும்

இ)கோவில்களில் தமிழில் வழிபாடு நடைபெறவேண்டும்
ஈ)பிறப்பு இறப்புத் தொடர்பான சடங்குகள் யாவும் தமிழில் நடைபெற வேண்டும்
விடை : ஆ)ஆங்கிலத்தின் மோகத்தை அழிக்க வேண்டும்

**35.இவற்றில் தேவநேயப் பாவாணர் இயற்றாத நூல் எது?**
அ)தமிழ் வரலாறு முதல் தாய்மொழி
ஆ)தமிழ்நாட்டு விளையாட்டுகள்
இ)தமிழர்திருமணம் ,தமிழர் மதம்
ஈ)கம்பர்யார்,அற்புத ரசம்
விடை : ஈ)கம்பர்யார்,அற்புத ரசம்

**36.இவற்றில் மொழிஞாயிறு தேவநேயப் பாவணர் இயற்றிய நூல் எது?**
அ)வடமொழி வரலாறு மண்ணிலே விண்
ஆ)பண்டைத் தமிழர் நாகரிகமும் பண்பாடும்
இ)சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள்,திருக்குறள் மரபுரை
ஈ)இவை அனைத்தும்
விடை : ஈ)இவை அனைத்தும்

**37.இதில் தேவநேப் பாவாணர் பற்றிய தவறான கூற்று எது?**
அ)சொற்பிறப்பியல் அகரமுதலித்திட்ட இயக்குநராக பணிபுரிந்தார்
ஆ)தஞ்சை தமிழ் பல்கலைக்கழகத்தில துணைவேந்தராக பணிபுரிந்தார்
இ)சொற்பிறப்பியல் அகரமுதலியை வெளியிட்டார்
ஈ)இருநூற்றுக்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் வெளிட்டார்
விடை : ஆ)தஞ்சை தமிழ் பல்கலைக்கழகத்தில துணைவேந்தராக பணிபுரிந்தார்

**38.இவற்றில் தேவநேயப் பாவாணர் பற்றிய சரியான கூற்று எது?**
அ)வறுமையில் வாடினாலும் கையில் பணம் கிடைத்தால் நூல்களே வாங்கினார்
ஆ)புலமைச் செருக்கில்லாமல் மிகவும் எளிமையான வாழ்வு வாழ்ந்தவர்
இ)அன்பு கசியும் நெஞ்சத்தில் ஆழமான நன்றியுணர்வு மிக்கவர்
ஈ)இவை அனைத்தும்
விடை : ஈ)இவை அனைத்தும்

**39.இவற்றில் பொருத்தமற்ற இணை எது?**
அ)தேவநேயப்பாவாணர் சென்னை மாவட்ட மைய நூலகம்
ஆ)பாவாணர் கோட்டம் - முறம்பு
இ)தேவநெயப் பாவாணர் முழு உருவச்சிலை - திருநெல்வேலி
ஈ)தேவநேயப் பாவாணர் நூலகம் - முறம்பு
விடை : இ)தேவநெயப் பாவாணர் முழு உருவச்சிலை - திருநெல்வேலி

**40.1981- இல் மதுரையில் ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டில் எந்த தலைப்பில் சொற் பொழிவாற்றித் தமிழன்னைக்கு பெருமைச் சேர்த்தார்**
அ)மாந்தன் தோற்றமும் தமிழர் மரபும்
ஆ)தமிழ் ஈழமும் தமிழ்நாடு தொடர்பும்
இ)தமிழ்மொழியில் வடமொழி கலப்பு
ஈ)தமிழ்மொழி முதன்மையான செம்மொழி
விடை : அ)மாந்தன் தோற்றமும் தமிழர் மரபும்

**41.இவற்றில் ஜி.யு.போப் பற்றிய சரியான கூற்று எது**
அ)ஜியார்ஜ் யுக்ளோ போப்
ஆ)பிரான்ஸ் நாட்டின் எட்வர்டு தீவில் பிறந்தார்
இ)போப் கிறித்துவ சமயப்பற்று மிக்கவர்
ஈ)இவை அனைத்தும்

விடை : அ)ஜியார்ஜ் யுக்ளோ போப்

**42.ஜி.யு.போப் இந்த இடத்தில் சமயப் பணியாற்றவில்லை**

அ)சென்னை - சாந்தோம்

ஆ)சேலம் - ஆத்தூர்

இ)திருநெல்வேலி - சாயர்புரம்

ஈ)தஞ்சாவூர்

விடை : ஆ)சேலம் - ஆத்தூர்

**43.போப் கிறித்துவ கல்லூரிகளில் இதனை கற்பிக்க ஏற்பாடு செய்தார்**

அ)தமிழ் இலக்கியம்

ஆ)ஆங்கில இலக்கியம்

இ)கிரேக்கம்,இலத்தீன்,எபிரேயம்

ஈ)இவை அனைத்தும்

விடை : ஈ)இவை அனைத்தும்

**44.ஜி.யு.போப் கல்லூரியில் இந்த பாடத்தை கற்பிக்கவில்லை**

அ)கணிதம்

ஆ)அறிவாய்வு(தருக்கம்)

இ)பௌதீகம்

ஈ)மெய்யறிவு(தத்துவம்)

விடை : இ)பௌதீகம்

**45.இவற்றில் ஜி.யு.போப் மொழியாக்கம் செய்யாத நூல் எது?**

அ)திருக்குறள்,நாலடியார்

ஆ)சிலப்பதிகாரம்

இ)புறநானூறு

ஈ)புறப்பொருள் வெண்பாமாலை

விடை : ஆ)சிலப்பதிகாரம்

**46.போப் இந்த இதழ்களில் தமிழ் பற்றிய ஆங்கிலக் கட்டுரைகளை எழுதினார்**

அ)இநதியன் சஞ்சிகை

ஆ)இந்தியாவின் தொல்பொருள் ஆய்வு

இ)சுதேசமித்திரன்

ஈ)அ மற்றும் ஆ

விடை : ஈ)அ மற்றும் ஆ

**47.இவற்றில் இதனை பற்றி போப் ஆராய்ச்சிக் கட்டுரைகளை ஆங்கிலத்தில் எழுதினார்**

அ)புறநானூற்றுப் பாடல்கள்

ஆ)புறப்பொருள் வெண்பாமாலைத் திணை விளக்கம்

இ)தமிழ்ப்புலவர்வரலாறு

ஈ)இவை அனைத்தும்

விடை : ஈ)இவை அனைத்தும்

**48.இவற்றில் ஜி.யு.போப் பற்றிய சரியான கூற்று எது?**

அ)தமிழைக் கற்கும் காலத்திலேயே நூலாசிரியராகவும் விளங்கினார்

ஆ)இலக்கண் நூல்களை எழுதினார்

இ)தமிழ் - ஆங்கில அகராதி ஆங்கிலம் - தமிழ் அகராதியை வெளியிட்டார்

ஈ)இவை அனைத்தும்

விடை : ஈ)இவை அனைத்தும்

**49.இவற்றில் போப் பற்றிய தவறான கூற்று எது?**

அ)பழைய தமழி இலக்கிய செய்யுள்களை தொகுத்து நூலாக வெளிட்டார்

ஆ)தமிழில் உரைநடை எழுதினார்

இ)நாடகம் பற்றிய தொகுப்பு நூலை இயற்றினார்

ஈ)உதகமண்டலத்தில் பள்ளி தொடங்கினார்

விடை : இ)நாடகம் பற்றிய தொகுப்பு நூலை இயற்றினார்

**50.ஜி.யு.போப் இங்கிலாந்து பல்கலைக்கழகத்தில இந்த மொழி கற்பிக்கும் பேராசிரியாராக பணிபுரிந்தார்**

அ)தமிழ்,கன்னடம்

ஆ)தமிழ்,தெலுங்கு

இ)தமிழ்,மலையாளம்

ஈ)தமிழ்,சமஸ்கிருதம்

விடை : ஆ)தமிழ்,தெலுங்கு

**51.போப் பற்றி தவறான கூற்று எது?**

அ)தேவாரம் முழுமையாக பதிப்பித்தார்
ஆ)தமிழ் மாணவன் என்று உயில் எழுதிவைத்தார்
இ)1900 திருவாசகத்தை ஆங்கிலத்தில மொழிபெயர்த்து வெளியிட்டார்
ஈ)திருக்குறளை 1886 -ல் மொழி பெயர்த்து வெளியிட்டார்
விடை : அ)தேவாரம் முழுமையாக பதிப்பித்தார்

**52.இவற்றில் பொருத்தமற்ற இணை எது?**

அ)புதுக்கவிதைக்கு பாரதியார்
ஆ)மரபுக்கவிதைக்கு ந.பிச்சமூர்த்தி
இ)சமுதயாப்புரட்சிக்குப் பாரதிதாசன்
ஈ)பொதுவுடைமைக்கு திரு,வி.க
விடை : ஆ)மரபுக்கவிதைக்கு ந.பிச்சமூர்த்தி

**53.இவற்றில் பொருந்தாத இணை எது?**

அ)தனித்தமிழுக்கு மறைமலையடிகள்
ஆ)பேச்சுக்கலைக்கு அறிஞர் அண்ணா
இ)இசைக்கலைக்கு மாணிக்கவாசகர்
ஈ)சிறுகதைக்கு புதுமைப்பித்தன்
விடை : இ)இசைக்கலைக்கு மாணிக்கவாசகர்

**54.வீரமாமுனிவர் எந்த நாட்டைச் சேர்ந்தவர்**

அ)இங்கிலாந்து
ஆ)ஜெர்மனி
இ)இத்தாலி
ஈ)பிரான்ஸ்
விடை : இ)இத்தாலி

**55.இவற்றில் வீரமாமுனிவரின் இயற்பெயர் என்ன?**

அ)இராபர்ட் -டி - நொபிலி
ஆ)சீசன் பால்கு
இ)ஏரியல் -லேமி லாசரஸ்
ஈ)கான்ஸ்டாண்டின் ஜோசப் பெஸ்கி
விடை : ஈ)கான்ஸ்டாண்டின் ஜோசப் பெஸ்கி

**56.இவற்றில் வீரமாமுனிவர் பற்றிய தவறான கூற்று எது?**

அ)ஆங்கிலம்,எபிரேயம்
ஆ)கிரேக்கம்,அறிந்திருந்தார்
இ)புதுவை ஆளுநராக பணியாற்றினார்
ஈ)தெலுங்கு,வடமொழி கற்றறிந்தார்
விடை : இ)புதுவை ஆளுநராக பணியாற்றினார்

**57.வீரமுனிவர் தமிழில்...... என்னும் அகரமுதலியை வெளியிட்டார்**

அ)மானிப்பாய் அகராதி
ஆ)மானுவல் தமிழ் அகராதி
இ)சதுர் அகராதி
ஈ)பைபிள்; அகராதி
விடை : இ)சதுர் அகராதி

**58.சதுர் அகராதி பற்றிய சரியான கூற்று எது?**

அ)தமிழின் முதல் அகராதி
ஆ)அகராதி என்ற வார்த்தை முதன் முதலில் அறிமுகமானது
இ)தமிழ் அகராதியின் தந்தை வீரமாமுனிவர்
ஈ)இவை அனைத்தும்
விடை : ஈ)இவை அனைத்தும்

**59.வீரமாமுனிவர் இயற்றிய அகராதி**

அ)தமிழ் - இலத்தீன் அகராதி
ஆ)இலத்தீன் - தமிழ் அகராதி
இ)தமிழ் - பிரெஞ்சு அகராதி
ஈ)இவை அனைத்தும்
விடை : ஈ)இவை அனைத்தும்

**60.தான் தமிழ் கற்றதைப் போலவே தன் நாட்டினர் அனைவரும் தமிழ் கற்கும் வகையில வீரமாமுனிவர் இதனை படைத்தளித்தார்**

அ)இலத்தீன் - தமிழ் அகராதி

ஆ)தமிழ் - இலத்தீன் அகராதி

இ)தமிழ் - பிரெஞ்சு அகராதி

ஈ)சதுரகராதி

விடை : அ)இலத்தீன் - தமிழ் அகராதி

**61.வீருமாமுனிவர் இயற்றிய நகைச்சுவை நூல் எது?**

அ)தொன்னூல் விளக்கம்

ஆ)தேம்பாவணி

இ)பரமார்த்தகுரு கதை

ஈ)கலம்பகம்

விடை : இ)பரமார்த்தகுரு கதை

**62.வீரமாமுனிவர் இயற்றிய தொன்னூல் விளக்கம் இவ்வாறு அழைக்கப்படுகிறது**

அ)குட்டி திருவாசகம்

ஆ)குட்டித் தொல்காப்பியம்

இ)குட்டி நன்னூல்

ஈ)குட்டி தேவாரம்

விடை : ஆ)குட்டித் தொல்காப்பியம்

**63.வீரமாமுனிவர் இயற்றிய கிறித்துவக் காப்பியம்**

அ)கலம்கபம்

ஆ)அம்மானை

இ)தேம்பாவணி

ஈ)கருணாமிர்தசாகரம்

விடை : இ)தேம்பாவணி

**64.இவற்றில் வீரமாமுனிவர் பற்றிய தவறான கூற்று எது?**

அ)தமிழ் எழுத்து வரிவடிவத்தை திருத்தி எழுத்துச் சீர்திருத்தம் மேற்கொண்டார்

ஆ)கலம்பகம் ,அம்மானை முதலிய சிற்றிலக்கியங்களை இயற்றினார்

இ)சைவ சித்தாந்த நூல்களுக்கு உரை எழுதினார்

ஈ)தமிழில் முதல் அகரமுதலியை வெளியிட்டார்

விடை : இ)சைவ சித்தாந்த நூல்களுக்கு உரை எழுதினார்

**65.சொல்லின் செல்வர் ரா.பி சேதுப்பிள்ளை வீரமாமுனிவருக்கு எதை கூறி புகழாரம் சூட்டினார்?**

அ)தேம்பாவணி,காவலூர் கலம்பகம் கதம்ப மாலையாகக் காட்சியளிக்கிறது

ஆ)தொன்னூல் பொன் நூலாக இலங்குகின்றது

இ)சதுரகராதி முத்தாரமாக மிளிர்கின்றது வீரமாமுனிவர் தமிழ் முனிவர்களுள் ஒருவராக விளங்குகின்றார்

ஈ)இவை அனைத்தும்

விடை : ஈ)இவை அனைத்தும்

**66.தந்தை பெரியார் பற்றிய சரியான கூற்று எது?**

அ)அறிவார்ந்த செயல்களால் பலரையும் ஈர்த்தார்

ஆ)அடிக்கடி ட்டங்களை நடத்தினார்

இ)சாதி உயர்வு தாழ்வுகளையும் மத வேறுபாட்டையும் அகற்ற வேண்டும் என்றார்

ஈ)இவை அனைத்தும்

விடை : ஈ)இவை அனைத்தும்

**67.சாதி உயர்வு தாழ்வுகளையும் மதவேறுபாட்டையும் அகற்ற வேண்டுமென பெரியார் அமைத்த சங்கம்**

அ)தென்னிந்திய நல சங்கம்

ஆ)சாதிமா ஒழிப்பு சங்கம்

இ)பகுத்தறிவாளர் சங்கம்

ஈ)இவை அனைத்தும்

விடை : இ)பகுத்தறிவாளர் சங்கம்

**68.இவற்றில் பெரியார் பற்றிய தவறான கூற்று எது?**

அ)திலகரின் தீவிர தொண்டர்

ஆ)காங்கிரஸ் கட்சியில் சேர்ந்தார்

இ)கள்ளுக்கடை மறியலில் ஈடுபட்டார்

ஈ)பிறப்பினால் வரும் சீழ்ச்சாதி - மேல்சரி

விடை : அ)திலகரின் தீவிர தொண்டர்

**69.கூற்று (A): தந்தை பெரியார் வைக்கம் வீரர் என அழைக்கப்படுகிறார்**

**கூற்று (B) கேரளாவில் வைக்கம் என்னும் ஊரில் தாழ்த்தப்பட்ட மக்கள்,கோவில் தெருவில் நடப்பதற்குத் தடை இருந்ததை எதிர்த்து பெரியார் போராடினார்**

அ)(A) மற்றும் (A) சரி மேலும் (A) வுக்கு (B) ஆனது சரியான விளக்கம்

ஆ)(A) மற்றும் (B) சரி ஆனால் (A) வுக்கு (B) சரியான விளக்கமல்ல

இ)(A) சரி (B) தவறு

ஈ)(A) தவறு (B) சரி

விடை : அ)(A) மற்றும் (A) சரி மேலும் (A) வுக்கு (B) ஆனது சரியான விளக்கம்

**70.கூற்று (A) எல்லோருக்கும் கல்வி தேவை எல்லொரும் கல்வி பெறுதல் வேண்டும் என்கிறார் பெரியார்**

**கூற்று (B) கழ்ச்சாதி - மேல்சாதி வேற்றுமை தீண்டாமைக் கொடுமைகள் அகல**

அ)(A) மற்றும் (B) சரி மேலும்(B) ஆனது (A) வுக்கான சரியான காரணம்

ஆ)(A) மற்றும் (B) சரி ஆனால் (B) ஆனது (A) வுக்கான சரியான காரணமில்லை

இ)(A) சரி (B) தவறு

ஈ)(A) தவறு ஆனால் (B) சரி

விடை : அ)(A) மற்றும் (B) சரி மேலும்(B) ஆனது (A) வுக்கான சரியான காரணம்

**71.கீழ்க்கண்டவற்றுள் பெரியாரின் சரியான ற்று எது ீளவை?**

(i) மனிதர்களில் சரிபாதியாக உள்ள பெண்களை மதித்தல் வேண்டும்

(ii) ஆண்கள் செய்யும் எல்லாவற்றையும் பெண்களும் செய்தல் வேண்டும்

(iii) பெண்களுக்கு நகையோ அழகான உடையோ முக்கிய இல்லை அறிவும் சுயமரியாதைதான் மிக முக்கியம்

அ)மூன்றும் சரியானவை

ஆ)மட்டும் சரியானது

இ)மட்டும் சரியானது

ஈ)மட்டும் சரியானது

விடை : அ)மூன்றும் சரியானவை

**72.1970-ம் ஆண்டு சமுதாயச் சீர்திருத்தச் செயல்பாடுகளுக்காக பெரியாருக்கு வழங்கப்பட்டது**

அ)அமைதி விருது

ஆ)யுனிசெப் விருது

இ)யுனெஸ்கோ விருது

ஈ)யுன் விருது

விடை : இ)யுனெஸ்கோ விருது

**73.தந்தை பெரியாருக்கு பெரியார் என்னும் பட்டம் இந்த மாநாட்டில் வழங்கப்பட்டது**

அ)தொழிலாளர் மாநாடு

ஆ)விவசாயிகள் மாநாடு

இ)பெண்கள் மாநாடு

ஈ)கோயில் பூசாரிகள் மாநாடு

விடை : இ)பெண்கள் மாநாடு

**74.பெரியார் பெண்களை இவ்வாறு வற்புறுத்தினார்**

அ)பெண்கள் எல்லோரும் கல்வி கற்க வேண்டும்

ஆ)மற்போர் குத்துச்சண்டை முதலிய விளையாட்டுகளையும் கற்றுக்கொள்ளுதல் வேண்டும்

இ)அரசுப்பணி ,ராணுவம்,காவல்துறை முதலியவற்றிலும் பெண்கள் சேர்த்தல் வேண்டும்
ஈ)இவை அனைத்தும்
விடை : ஈ)இவை அனைத்தும்

**75.பெரியார் இவ்வாறு தமிழக மக்காளால் போற்றப்படுகிறார்**
அ)தமிழர் தந்தை
ஆ)தமிழர் தாத்தா
இ)தமிழ் சிற்பி
ஈ)தமிழ் புரட்சியாளர்
விடை : அ)தமிழர் தந்தை

**76.முத்துராமலிங்கர் பிறந்த ஊர் எது?**
அ)பசும்பொன்
ஆ)கமுதி
இ)அருப்புக்கோட்டை
ஈ)சிவகாசி
விடை : அ)பசும்பொன்

**77.இவற்றில் முத்துராமலிங்கர் பற்றிய சரியான ற்று எது?**
அ)1908 அக்டோபர் 30-ல் பிறந்தார்
ஆ)இவர் அன்னையை இளமையில் இழந்தார்
இ)இவருக்கு கற்பித்த ஆசிரியர் குறை வற வாசித்தான்
ஈ)இவை அனைத்தும்
விடை : ஈ)இவை அனைத்தும்

**78.முத்துராமலிங்கனார் இதில் மிகுந்த வல்லவராக இரந்தார்**
அ)தமிழ்,ஆங்கிலம் இருமொழி வல்லமை
ஆ)சிலம்பம் குதிரை ஏற்றம் துப்பாக்கிச் சுடுதல்
இ)சோதிடம் மருத்துவம்
ஈ)இவை அனைத்தும்
விடை : ஈ)இவை அனைத்தும்

**79.கீழ்க்கண்டவற்றில் சரியான கூற்று எது/எவை?**
(i)இந்திய அரசு குற்றப்பரம்பரைச் சட்டம் இயற்றி மக்களுள் சிலரை ஒதுக்கி வைத்திருந்தது
(ii)முத்துராமலிங்கனார் குற்றப் பரம்பரையிலிருந்து விடுதலை பெறச் செய்தார்
(iii) முத்துராமலிங்கனார் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கை உயர்வுக்காகப் போரடினார்
அ)மூன்றும் சரியானவை
ஆ)(i) மற்றும் (ii) சரியானவை
இ)(ii) மற்றும் (iii) சரியானவை
ஈ)(iii) மட்டும் சரியானது
விடை : இ)(ii) மற்றும் (iii) சரியானவை

**80.இவற்றில் திரு.வி.கலியான சுந்தரனார் எந்த சிறப்புப் பெயரை கொண்டு முத்து ராமலிங்கனரை பாராட்டினார்?**
அ)வேதாந்த பாஸ்கர்
ஆ)பிரணவ கேசரி
இ)தேசியம் காத்த செம்மல்
ஈ)சன்மார்க்க சண்டமாருதம்
விடை : இ)தேசியம் காத்த செம்மல்

**81.முத்துராமலிங்கர் மனிதனின் மனநிலையை இவ்வாறு கூறினார்**
அ)மரள்,இருள்
ஆ)தெருள்
இ)அருள்
ஈ)இவை அனைத்தும்
விடை : ஈ)இவை அனைத்தும்

**82.இவற்றில் அம்பேத்கர் பற்றிய சரியான கூற்று எது?**
அ)சமுதாய மறுமலர்ச்சியின் முன்னோடி
ஆ)அரசியல் சட்டமேதை
இ)உலகச் சாதனையாளர் வரிசையில் முன்னிற்பவர்

ஈ)இவை அனைத்தும்
விடை : ஈ)இவை அனைத்தும்

**83.கீழ்க்கண்டவற்றுள் பொருத்தமான கூற்று எது/எவை?**

(i)அம்பேத்கரின் இயற்பெயர் பீமாராவ் ராம்ஜி
(ii)மகாபாரத பீமனை பின்பற்றி பீம் என பெயர் சூட்டப்பட்டார்
(iii)டிசம்பர் திங்கள் பதினான்காம் நாள் அம்பேத்கர் தினம்
அ)மூன்றும் சரியானவை
ஆ)(i) மற்றும் (ii) சரியானவை
இ)(ii) மற்றும் (iii) சரியனவை
ஈ)(i) மற்றும் (iii) சரியானவை
விடை : ஆ)(i) மற்றும் (ii) சரியானவை

**84.அம்பேத்கர் பற்றிய பொருத்தமற்ற இணை எது?**

அ)பம்பாய் எல்பின்ஸ்டன் - இளங்கலைப் பட்டம்
ஆ)கொலம்பியா பல்கலைக்கழகம் - முதுகலைப் பட்டம்
இ)பிரான்ஸ்- பொருளாதார முனைவர் பட்டம்
ஈ)லண்டன் - பாரிஸ்டர் பட்டம்
விடை : இ)பிரான்ஸ்- பொருளாதார முனைவர் பட்டம்

**85.அம்பேத்கரின் படிப்பிற்கான பொருளுதவியை செய்தவர்**

அ)மராட்டிய மன்னர்
ஆ)சிந்தியா மன்னர்
இ)பரோடா மன்னர்
ஈ)ஜெய்ப்பூர் மன்னர்
விடை : இ)பரோடா மன்னர்

**86.அம்பேத்கர் எங்கு பொருளியல் பேராசிரியராக பணியாற்றினார்?**

அ)டெல்லி
ஆ)மும்பை
இ)கொல்கத்தா
ஈ)கான்பூர்
விடை : ஆ)மும்பை

**87.கீழ்கண்டவற்றுள் எது/எவை சரியான கூற்று**

(i) அம்பேத்கர் வழக்கறிஞர் தொழிலை மேற்கொண்டார் கட்டணமின்றி ஏழைகளுக்கு வழக்காடி நீதியை பெற்றுத்தந்தார்
(ii) அம்பேத்கர் அனைத்து துறைகளிலும் நிகரற்ற அறிஞராகத் திகழ்ந்தார்
(iii)நேரு ஆட்சியில் நிதித்துறை அமைச்சராக பிணியாற்றினார்
அ)மூன்றும் சரியானவை
ஆ)(i) மற்றும் (ii) சரியானவை
இ)(ii) மற்றும் (iii) சரியானவை
ஈ)(i) மற்றும் (iii) சரியானவை
விடை : ஆ)(i) மற்றும் (ii) சரியானவை

**88.கீழ்க்கண்டவற்றுள் பொருத்தமான கூற்று எது எவை?**

(i)தந்தை பெரியார் 19624-ல் கேரளாவில் வைக்கத்தில் ஒடுக்கப்பட்டோர் ஆலய முயற்சிக்கான போரட்டத்தை நடத்தினார்
(ii) 1927-ல் அம்பேத்கர் மராட்டியத்தில மகாத்துக் குளத்தில் தண்ணீர் எடுக்கும் போரட்டத்தை நடத்தினார்
(iii) பெரியாரும் அம்போத்கரும் இந்தியாவில் முதன்முதலில மனித உரிமைக்கான போரட்டங்களை நடத்தியவர்கள்
அ)மூன்று சரியானவை
ஆ)(i) மட்டும் சரியானது
இ)(ii)மட்டும் சரியானது
ஈ)(iii) மட்டும் சரியானது
விடை : அ)மூன்று சரியானவை

**89.1946-ல் அம்பேத்கர் மக்கள் கல்விக் கழகத்தை எங்கு தோற்றுவித்தார்?**

அ)சூரத்

ஆ)மும்பை

இ)லக்னோ

ஈ)டெல்லி

விடை : ஆ)மும்பை

**90.உலக பொருளாதார அறிஞர்களால் பெரிதும் போற்றப்படும் அம்பேத்கர் எழுதிய பொருளாதார நூல் எது?**

அ)நாடுகளின் செல்வம்

ஆ)இந்தியாவில் வறுமை

இ)இந்தியப் பொருளாதார மாற்றம்

ஈ)இந்தியாவின் தேசியப் பங்குவீதம்

விடை : ஈ)இந்தியாவின் தேசியப் பங்குவீதம்

**91.இவற்றில் அம்பேத்கரின் கருத்து எது?**

அ)செல்வமும் உழைப்பும் இல்லாத கல்விகளர்நிலம்

ஆ)எல்லா மனிதர்களையும் ஒரெ மாதிரியாக நடத்துவதே சமத்துவமாகும்

இ)சமூகத்தின் மாற்றத்திற்குச் சிந்தனை விதைகளைத் தூவுகின்ற புரட்சியாளர்களாலேயே இந்த வையகம் வாழ்கிறது

ஈ)இவை அனைத்தும்

விடை : ஈ)இவை அனைத்தும்

**92.கீழ்க்காணும் கூற்றுகளில் சரியானவை எது/எவை?**

(i) அம்பேத்கர் உலகத் தலைவர்களுள் ஒருவர் : பகுத்தறிவுச் செம்மல் மக்களின் மாபெரும் வழிகாட்டி அப்பெருந்தலைவரைப்போல வேறு யாரையும் நாம் காண முடியாது" - பெரியார்

(ii)பகுத்தறிவுத் துiறியல அம்பேத்கருக்கு இணை அவரே ஆசியக் கண்டத்திலேயெ மிகப்பெரிய தனியார் நூலகத்தை அமைத்த பெருமை இவரையே சாரும்"- ஜவஹர்லால் நேரு

(iii) அண்ணல் அம்பேத்கர் தன்னல் மற்றவர் மிகவும் ஆர்வத்துடனம் விரைந்தும் தன்னந்தனியாகச் செயல் பட்டவர் - இராஜேந்திர பிரசாத்

அ)மூன்றும் சரியானவை

ஆ)(i) மட்டும் சரியானது

இ)(ii) மட்டும் சரியானது

ஈ)(iii) மட்டும் சரியானது

விடை : அ)மூன்றும் சரியானவை

**93.அண்ணல் அம்பேத்கருக்கு பாரத ரத்னா விருது எப்போது வழங்கப்பட்டது?**

அ)1989

ஆ)1990

இ)1991

ஈ)1992

விடை : ஆ)1990

**94.கூற்று(i) இருபெருந்தலைவர்கள் இந்தியாவில இருந்தார்கள் ஒருவர் மௌரியர்மற்றொருவர் அம்பேத்கர் கூற்று (ii) வடக்கே இருந்து அம்பேத்கரும் தெற்கேயிருந்து பெரியாரும் இடைவிடாது உழைத்தனால் சாதி என்னும் பாறை உடைந்து சுக்கு நூறானது**

அ)(i) மட்டும் (ii) சரியானவை

ஆ)(i) சரி (ii) தவறு

இ)(i) தவறு (ii) சரி

ஈ)(i) மற்றும்(ii) தவறானவை

விடை : அ)(i) மட்டும் (ii) சரியானவை

**95.காமராசரை குறிக்கும் புகழுரை**

அ)தன்னலமற்ற தலைவர்

ஆ)கர்மவீரர்

இ)ஊழைப்பங்காளர்

ஈ)இவை அனைத்தும்

விடை : ஈ)இவை அனைத்தும்

**96.கீழ்காணும் கூற்றை ஆய்க**

(i)காமராசர் விருதுநகரில பிறந்தார்

(ii) பெற்றோர் குமாரசாமி சிவகாமி

(iii) திண்ணணைப் பள்ளியில் பயின்றார்

மேற்கண்டவற்றில சரியானது எதுஃஎவை

அ)மூன்றும் சரியானவை

ஆ)(i) மட்டும் சரியானது

இ)(ii) மட்டும் சரியானது

ஈ)(iii)மட்டும் சரியானது

விடை : அ)மூன்றும் சரியானவை

**97.காமராசர் பயின்ற மெய்கண்டான் புத்தகச்சாலை என்பது**

அ)புத்தக விற்பனை நிலையம்

ஆ)நூல் நிலையம்

இ)உயர்நிலப்பள்ளி

ஈ)கல்லூரி

விடை : ஆ)நூல் நிலையம்

**98.இதில் எந்த போரட்டத்தில் காமராசர் பங்கேற்கவில்லை?**

அ)வைக்கம் போராட்டம்

ஆ)உப்புச சத்தியாகிரகம்

இ)சைமன் குழு எதிர்ப்பு

ஈ)வெள்ளையனே வெளியேறு

விடை : அ)வைக்கம் போராட்டம்

**99.காமராசர் யாரை தனது அரசியல் குருவாக ஏற்றுக்கொண்டார்?**

அ)ராஜகோபாலாச்சாரியார்

ஆ)பட்டாபி சீத்தாராமையா

இ)சத்தியமூர்த்தி

ஈ)ஆர்.வெங்கட்ராமன்

விடை : இ)சத்தியமூர்த்தி

**100.இவற்றில் காமராசர் பற்றிய இணை எது?**

அ)1939 - தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி தலைவர்

ஆ)1945 - கல்வியமைச்சராக இருந்தார்

இ)1954 - முதலமைச்சரானார்

ஈ)1963 - முதலமைச்சர் பதவி விலகினார்

விடை : ஆ)1945 - கல்வியமைச்சராக இருந்தார்